வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர்
சுதேசமித்திரன்
வாரப்பதிப்பு

# சென்னை சர்க்கார் வரவு-செலவுத் திட்டம்

அபிவிருத்தித் திட்ட கால நடுவிலிருப்பதால் துண்டு பட்ஜெட்டுகளும், வருடா வருடம் புதிய வரிகளும் ஜனங்களுக்கு சகஜமாகி விட்டன. எதிர்பார்த்ததுபோலவே, திங்களன்று சமர்ப்பிக்கப்பட்ட 1956-57க்கான சென்னை சர்க்கார் வரவு-செலவுத் திட்டத்தில் 311 லட்ச ரூபாய் துண்டு விழுகின்றது. புதிய வரிகள் மூலம் ஈடு செய்யக் கூடிய ரூ. 145 லட்சம் போக எஞ்சி நிற்பது ரூ. 166 லட்சமாகும். புதிய வரிகள் காரணமாக டீஸல் எண்ணெய் மீது வரி ரூபாய்க்கு 1½ அணாவிலிருந்து 4 அணாவாக உயருகிறது; சில இடங்களில் மின்விசை சப்ளைக் கட்டணம் 30-சத விகிதம் அதிகரிக்கின்றது. இனாம் நிலங்கள் மீது இனி ரயத்துவாரி விகிதப்படி வரி விதிக்கப்படும். சர்க்கரை மீது ஏதாவது ஒரு கட்டத்தில் ரூபாய்க்கு ஒரு அணா வீதம் மேற்கொண்டு விற்பனை வரி சுமரும்.

முதல் இரு வரிகளும் விசை அல்லது இயந்திர சாதனங்களைக் கொண்டு இயங்கும் விவசாயத்தையும், மற்ற பல தொழில்களையும் பாதிக்கும். விவசாயத் துறையில் இவை வரவர அதிகமாக உபயோகிக்கப்படுவது யாவரும் அறிந்ததே. அவ்வளவாக லாபகர தொழிலாக இல்லாதிருப்பதாலும், உணவுப் பெருக்கத்தை உத்தேசித்தும் விவசாயத்துக்கு வரி உயர்வினின்று விலக்களித்திருக்கலாம். இனாம் நிலத்தை வாங்கியவர்களைக் கடுமையாகப் பாதிக்கும், வரி விஷயத்தில் இதுகாறும் இருந்து வந்த சலுகையை ரத்து செய்தது. சர்க்கரையின் விலை ஏறுமுகமாயிருக்கையில், விற்பனை வரியை உயர்த்தியிருப்பது வருந்தத்தக்கது.

வரி விதிப்பில் ஒரு வரவேற்கத்தக்க அம்சம், பனைவெல்லத்திற்கு விற்பனை வரி ரத்து செய்யப்பட்டிருப்பதாகும். ஒரே முனை விற்பனை வரியே அனுகூலமானதென்றும், குறிப்பிட்ட சில உணவுப் பண்டங்களுக்கு இவ்வரியிலிருந்து விலக்களிக்க வேண்டுமென்றும் நெடுநாளாக இருந்துவரும் கோரிக்கைபற்றி சர்க்கார் சிந்தித்ததற்கான அறிகுறிகூட பட்ஜெட்டில் தென்படவில்லை.

புது வரிகளுக்குப் பின்பும் துண்டு விழும் தொகையானது, வருமான அதிகரிப்பாலும் மத்திய சர்க்காரிடமிருந்து ஏதாவதொருவித உதவியாலும் ஈடு செய்யப்படலாம். 5 லட்ச ரூபாய்க்குக் குறைவான மூலதனச் செலவுகள், வழக்கத்திற்கு மாறாக இவ்வருடம் (ஆடிட்டர்-ஜெனரல் யோசனைப்படி) நடைமுதல் செலவின ஜாபிதாவிலிருந்து மூலதனச் செலவின் ஜாபிதாவுக்கு மாற்றப்பட்டிருக்கிறது. எதிர்காலத்தில் பயனளிக்கக்கூடிய திட்டங்களின் செலவுப் பொறுப்பை வருங்காலத்தினரே கூடிய வரை ஏற்கச் செய்வதென்ற கொள்கை நியாயமானதே.

பட்ஜெட் புரியும் சொற்ப நன்மைகளில், எஸ்டேட் கிராம அதிகாரிகளுக்கும், மற்ற கிராம அதிகாரிகளுக்குமிடையே உள்ள சம்பள வித்தியாசத்தை ஒழிப்பது ஒன்று. அதேபோல ஸெகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்குள்ளாகவும் இனி சம்பளத்தில் ஏற்றத்தாழ்விராது. ஆனால் பொதுவாக எல்லா ஆசிரியர்களுக்கும் சம்பளத்தை உயர்த்துவதுபற்றிப் பேச்சேயில்லை. போலீஸ்காரர்கள், சர்க்காரின் கடைநிலை ஊழியர்களின் நிலையும் அப்படியே நீடிக்கின்றது. ஆனால், இவர்களுடைய குழந்தைகளுக்கு 6-வது படிவம் வரை சம்பளச் சலுகை அளித்திருப்பது வரவேற்கத் தக்கது. இத்தகைய சலுகை எல்லா ஏழைக் குழந்தைகளுக்கும் காலக் கிரமத்தில் கிடைக்குமென எதிர்பார்க்கிறோம்.

துண்டு விழும் தொகையோடு, மூலதனச் செலவு ரூ. 28 கோடி, கடன் ஆகியவற்றைச் சேர்த்து மொத்தம் 38 கோடி ரூபாய்க்குச் சர்க்கார் வகை செய்தாக வேண்டும். மத்திய சர்க்காரிடமிருந்தும், பொதுமக்களிடம் கடன் மூலமாகவும் 34½ கோடி ரூபாய் எதிர்பார்க்கப்படுகிறது. சென்ற வருடம் கோரியதற்கும் அதிகமாக மார்க்கெட்டில் கடன் வசூலிக்க முடிந்தது, சர்க்காருக்குத் தெம்பு அளிக்கும். ஐந்தாண்டு அபிவிருத்தித் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளவற்றிற்காக பட்ஜெட்டில் ரூ. 38 கோடி ஒதுக்கப்படவிருக்கிறது. இது சென்னை சர்க்கார் உத்தேசித்திருந்ததைவிடக் குறைவானதே.

பொதுவாக, அடுத்த திட்டத்தின் கீழ் பெரியாறு, குண்டா மின்விசைத் திட்டங்களைத் தவிர சென்னையில் நிறைவேற்ற வேறு பெருந் திட்டங்களில்லை. கேந்திரத் தொழில்கள் நிறுவுதல், போக்குவரத்து அபிவிருத்தி ஏற்பாடுகளில் நமக்கு ஒதுக்கப்பட்டிருப்பது ஏதுமில்லை. தென்னிந்தியா புறக்கணிக்கப்படுகிறதென்ற குறை இனியும் நீடிக்காமல் இதைப் பரிகரிக்கச் சீக்கிரம் மத்திய சர்க்காரும், திட்டக் கமிஷனும் முன்வரவேண்டும்.